30.07.2026.

O.S.No. 48/2022

DW1– முருகையா – த/பெ. ஆறுமுக நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 30.07.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. எனது பாட்டியின் பெயர் பரமாச்சி என்றால் சரிதான். எனது பாட்டிக்கு 4 பேர் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். புன்னைவன நாடார், லெட்சுமண நாடார், ஆறுமுக நாடார் மற்றும் குழந்தைவேல் நாடார் ஆகியோர்கள் என்றால் சரிதான்.

2. வாதிகள், எனது பாட்டி 1940ம் ஆண்டு கிரையம் வாங்கிய சொத்து சம்பந்தமாக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பரமாச்சி அம்மாள் 6 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பரமாச்சி அம்மாள் இறந்தபிறகு அவரது ஆண்வாரிசுகள் 4 பேரும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் வடபாகம் புன்னைவன நாடாருக்கு என்றால் சரிதான், அதற்கு அடுத்த தென்பாகம் லெட்சுமணன் என்பவருக்கும், அதற்கு அடுத்த தென்பாகம் ஆறுமுகநாடாருக்கும், அதற்கு அடுத்த தென்பாகம் குழந்தைவேல்நாடாருக்கும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சொத்துக்களை பிரிக்கும்போது கிழமேலாக 4 அடி அகலத்தில் தென்வடலாக மொத்த சொத்தின் நீளத்திற்கும் பாதை அமைக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. லெட்சுமண நாடார் தனக்கு கிடைத்த பாகத்தை புன்னைவன நாடார் மனைவி கர்ப்பம்மாளுக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால்

சரிதான். கர்ப்பம்மாளின் கிரைய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தெற்குகடைசியில் ஒதுக்கப்பட்ட குழந்தைவேலுக்கு வாரிசுகள் இல்லாமல் காலமனார் என்றால் சரிதான். குழந்தைவேல் நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஆறுமுகநாடார் எடுத்துக்கொண்டும், ஆறுமுகநாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் வடபாதியை புன்னைவனநாடாருக்கும், தென்பாதியை ஆறுமுகநாடாரும் வைத்துக்கொண்டுள்ளதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. மேற்படி ஏற்பாட்டின்படி சொத்து பிரித்துக்கொண்டு, லெட்சுமணநாடார் கர்ப்பம்மாளுக்கு கொடுத்த கிரைய ஆவணத்திலே தெற்குஅற்றமாக ஆறுமுகநாடார் பாகம் என்று வடக்கில் புன்னைவன நாடார் பாகம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. வாதிகள் தற்போது 2 வீடுகள் லெட்சுமண நாடாருக்கு பாத்தியப்பட்ட இடத்திலும், மேற்படி ஏற்பாட்டில் சொன்னவாறு ஆறுமுகநடாரின் வடபாதியிலும் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு கதவு எண்கள் ஊராட்சியால் வழுங்கப்பட்டது என்றால் சரிதான். மின்இணைப்பும் மேற்படி நபர்களின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் நான் இளவர் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமானது பரமாச்சி அம்மாளும், குழந்தைவேல் நாடாரும், எனது தகப்பனார் ஆறுமுகநாடாரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தாக துலங்குகிறது என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தந்தையும், எனது பெரியப்பா குழந்தைவேல் நாடாரும் பாகம் செய்ததாக காட்டப்பட்டுள்ளது அந்த பாகம் எப்போது நடைபெற்றது, எதன் அடிப்படையில் நடைபெற்றது என்றால் அது தென்காசி நீதிமன்றத்திற்கு தான் தெரியும்.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனதுதந்தையுடன் உடன்பிறந்த அனைவரும் கைரேகை தான் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான், ஏனென்றால் அவர்களுக்கு படிக்கத்தெரியாது. அவர்களது கைரேகை தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி எனது பெயர் வருவாய் ஆவணங்களில் மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல, தீர்வை ரசீது தாக்கல் செய்துள்ளேன்.

9. பி.வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் எந்தவித அனுபவமும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விவரத்தை நான் எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேன்.

10. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வடக்குபக்கமாக பரமாச்சி அம்மாள் கைவசமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் வடபாகம் எனக்கு பாத்தியப்பட்டது கிடையாது.

11. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 செண்ட் தான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதுபோக 4 செண்ட் இடத்தை எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

12. எனது எதிருரை 6 வது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள பாகம் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்லியுள்ளது குழப்பமாக உள்ளது என்றால் சரியல்ல.

13. எனது வீட்டின் கதவு எண்.6/76 என்றால் சரிதான். எனவே எனது வீடானது 6/74 மற்றும் 6/75 க்கு தென்பக்கமாக உள்ளது என்றால் சரிதான்.

14. எனக்கு கதவு எண்.6/77 ல் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் இடத்தில் கட்டிடம் துலங்காது என்றால் சரியல்ல.

15. நான் தாக்கல் செய்துள்ள வில்லங்கசான்றிதழ் 1967–74 வரையுள்ளது என்றால் சரிதான். இதற்கு பின்பு என்னென்ன வில்லங்கம் உள்ளது என நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான். புன்னைவன நாடாருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் குப்பை போட எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்த பின்பு குப்பை போடுவதை நிறுத்திவிட்டேன். வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/– K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**